விருதுநகர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 1040— திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விருதுநகரில் அரசு மருத்துவமனையில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கக் கூடுதல் படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்சமயம் இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏராளமான உள் நோயாளிகள், படுக்கை வசதி இல்லாமல் தரையில் படுக்கக் கூடிய நிலை மயில் கஷ்டப்படுகின்றனர். அதை உடனடியாக மாற்றி அமைக்கும் வகையில் அங்கே கூடுதல் கட்டிடம் கட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவு வழங்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்சமயம் இல்லை என்று தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, இங்கே ஒரு பெட்டிஷன் மூலமாக கொடுப்பார்களே யானால், அதை மீண்டும் ஆராயலாம். அதை ஒரு பெரிய மருத்துவமனையாக கொண்டு வரவேண்டும் என்கிற நிலைமை இருக்கிற காரணத்தால், இரண்டு பிரச்னைகளையும் தீர ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்றுதான், தற்சமயம் இல்லை என்று நான் பதில் அளித்தேன்.

வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்குவரத்துக் கழக பெருந்துகள் செல்லும் வழித்தடங்கள்.

*வினா எண் 1041— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் பெரியார் போக்குவரத்து கார்ப்பரேஷன் அரசு அனுமதி பெற்ற பலவழித் தடங்களில் பேருந்துகள் விடப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) அதன் விவரமென்ன?

(இ) காரணமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) வடாற்காடு மாவட்டத்தைப் பொருத்தமட்டில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் அரசு அங்கீகாரம் பெற்ற எல்லா வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்குகிறது.

(ஆ) மற்றும் (இ): கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)